## சிறப்பு  தீர்மானம்

## 16–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.I.ஜவஹர் அவர்களும் மற்றும் 49–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.வி.ஜெய விக்கரமன் அவர்களும் கொண்டுவந்த சிறப்பு தீர்மானம்

தமிழ்நாட்டில் பல கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட பல கட்டிடங்களை காணொளி வாயிலாக திறந்து வைக்கின்ற சூழலில் நமது நாகர்கோவில் மாநகராட்சிக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் ரூபாய்.10 கோடியே 50 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட கலைவாணர் மாளிகை கட்டிடத்தை தன்னுடைய திருக்கரங்காளல் 07.03.2023 அன்று திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் உள்ளாட்சி துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் அவரை இந்த நிகழ்விற்கு அழைத்து வர பெரும் முயற்சி எடுத்த நமது நாகர்கோவில் மாநகராட்சியின் முதல் மேயர் ரெ.மகேஷ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றிட கேட்டல்.

16–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.I.ஜவஹர் அவர்களும் 49–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.வி.ஜெய விக்ரமன் அவர்களும் எழுத்து மூலமாகவும் மற்றும் அனைத்து கட்சியை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் மாமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நாகர்கோவில் மாநகராட்சியின் புதிய கட்டிடம் ரூ.10 கோடியே 50 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பல கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட பல கட்டிடங்களை காணொளி வாயிலாக திறந்து வைக்கின்ற சூழலில் நமது நாகர்கோவில் மாநகராட்சிக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.03.2023 காலை 9.30 மணிக்கு நேடியாக மாநகராட்சிக்கு வருகை தந்து மாநகராட்சி கட்டிடம், கலைவாணர் மாளிகையை தன் திருக்கரத்தால் திறந்து வைத்தமைக்கு அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி சார்பாகவும் இதயம் கனிந்த

நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு வருகை தந்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.நேரு, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் மாண்புமிகு I.பெரியசாமி, வருவாய் துறை அமைச்சர் மாண்புமிகு K.K.S.S.R.இராமசந்திரன் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் மாண்புமிகு த.மனோ தங்கராஜ் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு அழைத்து வர பெரும் முயற்சி எடுத்த நமது நாகர்கோவில் மாநகராட்சியின் முதல் மேயர் ரெ.மகேஷ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து இம்மாமன்றம் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றியது.

30.03.2023 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற சட்டமன்ற மானிய கோரிக்கையின் போது மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையாளர் வைத்த கோரிக்கையான ரூ.55 கோடி மதிப்பீட்டில் வடசேரி கனக மூலம் சந்தையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்கி அறிவிப்பு செய்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் இம்மாமன்றம் இதய பூர்வமான நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் எண். 172 அனுமதிக்கப்பட்டது**